

ஒரு நாள் அரசவையில் பல பிரபுக்கள் தாங்கள் யுத்தத்தில் செய்த வீரச் செயல்களைப் பற்றி தற்பெருமையுடன் பேசிக்கொண்டிருந்தனர்.

அவற்றையெல்லாம் மிகப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த தெனாலிராமனோ, **“நீங்கள் செய்ததெல்லாம் நான் செய்த வீரச்செயலுக்கு முன்னால் ஒரு தூசுக்குச் சமமாகும்.**
**நான் யுத்தகளத்தில் எதிரியான சேனாதிபதியின் எதிரே சென்று அவனுடைய கால்களில் ஒன்றை வெட்டிவிட்டேன்!”** என்றான்.

அனைவரும் அதைக்கேட்டு ஆச்சரியமடைந்து **“அவனுடைய தலையை வெட்டாமல் ஏன் காலை வெட்டினாய்?”** என்று கேட்டனர்.

அதற்கு தெனாலி ராமன், "**அவனுடைய தலையை எனக்கு முன்னால் வேறு எவனோ வெட்டிக்கொண்டு போய்விட்டானே!**" என்றான். அதைக்கேட்டு அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

TamilBooksPDF.Com